தினமணி 17.08.2017

# புகளூர் காகித ஆலை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்




முகாமில் நோயாளியை பரிசோதிக்கும் மருத்துவர்.

**கரூர், ஆக. 16:** புகளூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் நடைபெற்ற இலவச கண் மருத்துவ முகாமில் நோயாளிகள் 477 பயனடைந்தனர்.

கரூர் புகளூர் காகித ஆலை மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, மாவட்ட பார்வை இழப்புத்தடுப்பு சங்கம் ஆகியவற்றின் சார்பில் ஆலையைச் சுற்றியுள்ள காகிதபுரம், பு.புகளூர், புஞ்சைத் தோட்டக்குறிச்சி பேரூராட்சிகள் மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பகுதி மக்களுக்காக இலவச கண்மருத்துவமனை முகாம் அண்மையில் நடைபெற்றது.

காகித ஆலை சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற இம்முகாமை ஆலையின் செயல் இயக்குநர்(இயக்கம்) வெங்கடராமகிருஷ்ணன் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தார். பொதுமேலாளர் பாலசுப்ரமணியன்(மின்சாரம் மற்றும் கருவியியல்), துணைப் பொதுமேலாளர்கள் சீனிவாசன்(தோட்டக்கலை மற்றும் மூலப்பொருள் கொள்முதல்), டேவிட் மாணிக்கம்(மனிதவளம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் நோயாளிகளுக்கு மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையின் குழுவினர் சர்க்கரை நோய் காரணமாக பார்வையிழப்பு, பிறவி கண் புரை, பிறவி கண் நீர் அழுத்த நோய், கிட்டப் பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து குறைபாடு, கண் எரிச்சல், கருவிழியில் புண், பார்வை குறைபாடு உள்ளிட்ட கண் சம்பந்தமான நோய்களுக்கு பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர்.

முகாமில் 477 நோயாளிகள் பயனடைந்தனர். இதில் 238 பேருக்கு ரூ. 60,000 மதிப்பிலான மூக்கு கண்ணாடிகள் ஆலையின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் கண்புரை அறுவை சிகிச்சைக்காக மதுரை அரவிந்த்கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சைக்கான தொகை, உள்விழிலென்ஸ் உள்ளிட்டவை ஆலை சார்பில் வழங்கப்பட்டது.